**ந.க.எண்.509/2022/இ1** **நகராட்சி அலுவலகம்,**
**கூடலூர்.**
**நாள்:– 24.02.2023**

## <u>சாதாரண கூட்ட அழைப்பிதழ்</u>

திருவள்ளுவர் ஆண்டு, சுபகிருது வருடம் மாசி திங்கள் 15–ஆம் நாள் (பிப்ரவரி மாதம் 27–ஆம் (நாள்:–27.02.2023) திங்கட்கிழமையன்று காலை 11.00 மணியளவில் கூடலூர் நகராட்சி நகர்மன்றக்கூட்ட அரங்கில் நகர்மன்ற தலைவர் அவர்களின் தலைமையில் சாதாரணக்கூட்டம் நடைபெற உள்ளது. அது சமயம் அக்கூட்டத்திற்கு நகர்மன்ற துணைத்தலைவர் மற்றும் நகர்மன்ற உறுப்பினர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

**நகர்மன்றத்தலைவர்**
**கூடலூர் நகராட்சி**

**பொருள்.1**

ஆணையாளர் அவர்களின் 01/2023 ஆம் மாதந்திர நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு:</u>**

பதிவு செய்யலாம்.

**தீர்மான எண்.348,பதிவு செய்யப்பட்டது.**

**பொருள்.2**

நகராட்சி பொறியாளர் அவர்களின் 01/2023 ஆம் மாதந்திர நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு:</u>**

பதிவு செய்யலாம்.

**தீர்மான எண்.349,பதிவு செய்யப்பட்டது.**

**பொருள்.3**

கூடலூர் நகராட்சி எல்கைக்குட்பட்ட தேசிய நகர்புற வாழ்வாதார திட்டத்தின் கீழ் நடைபாதை வியாபாரிகள் (வாழ்வாதார பாதுகாப்பு மற்றும் நடைபாதை விற்பனை ஒழுங்குபடுத்துதல்) சட்டம் -2014 இன் பிரிவு 38(1) இன் கீழ் பிறப்பிக்கப்பட்ட தமிழ்நாடு நடைபாதை வியாபாரிகள் (வாழ்வாதார பாதுகாப்பு நடைபாதை விற்பனையை ஒழுங்குபடுத்துதல் மற்றும் உரிமம் வழுங்குதல்) திட்டம்-2015 இன் விதி-11 இன் கீழ் அமைக்கப்பட வேண்டிய நகர விற்பனைக் குழுவின் எண்ணிக்கையிலான உறுப்பினர்களை தேர்வு செய்வது தொடர்பாக தேர்தல் நடத்துவது தினசரி நாளிதழில் விளம்பரம் செய்தல் போன்ற பணிகளுக்கு ஆகும் உத்தேச செலவினத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு:-</u>**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி செலவினத்தினை NULM திட்ட நிதி மற்றும் வருவாய் நிதி மூலம் மேற்கொள்ளலாம்.
3. பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி மேற்கொண்டதற்கு மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.350,அனுமதிக்கப்பட்டது.**

பொருள்.4

கூடலூர் நகராட்சி, நகர்மன்றத் தீர்மான எண்.242, நாள் **.30.11.2022** ஆம் தேதிய தீர்மானத்தில் அனுமதிக்கப்பட்டபடி, நகராட்சி அலுவலக பயன்பாட்டிற்கு தேவையான பேப்பர்கள் வாங்கும்பணி **25.01.2023** ஆம் நாள் விலைப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற இரண்டு விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது. (ந.க.எண்246./2017/டி.1)

| வ.எண் | பொருள் விவரம் | கே.சேகர் ஒப்பந்ததாரர்,கூடலூர் | பி.முருகன் ஒப்பந்ததாரர்,கூடலூர் |
|---|---|---|---|
| 1 | A**4 பேப்பர் ரிம் (1 எண்ணம்)** | **ரூ. 320.00** | **ரூ. 300.00** |
| 2 | FS **பேப்பர் ரிம் (1 எண்ணம்)** | **ரூ. 370.00** | **ரூ. 350.00** |

**அலுவலகக் குறிப்பு : –**

1. வரப்பெற்ற இரண்டு விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி கொடு பி.முருகன் ஒப்பந்ததாரர்,கூடலூர் எனபவரின் விலைப் புள்ளியினை மன்றம் ஏற்க்கலாம்.
2. மேற்கண்ட பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவரின் முன்அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதையும்,செலவினம் மேற்கொண்டதையும் மன்றம் ஏற்கலாம்.

**தீர்மான எண்.351,அனுமதிக்கப்பட்டது.**

பொருள்.5

கூடலூர் நகராட்சியில் 15 வது மத்திய நிதி குழு மானிய திட்டம் 2020-21 ன் கீழ் பொறியியல் பிரிவில் புதியதாக 6000 லிட்டர் கொள்ளளவு கொண்ட வாட்டர் டேங்கர் லாரி வாங்கப்பட்டுள்ளது. மேற்படி வாகனத்திற்கு வட்டார போக்குவரத்து அலுவலகத்திற்கு செலுத்த வேண்டிய பதிவு கட்டணம்,சாலை வரி,ஸ்மார்ட் கார்டு கட்டணம்,சேவை கட்டணம் மற்றும் இதர கட்டணம் தொகை Xpress Computers உத்தமபாளையம் என்ற நிறுவனத்திற்கு செலுத்த ரூ.50,000/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி செலவினத்தினை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.
3. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று தொகை வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.352,அனுமதிக்கப்பட்டது.**

பொருள்.6

தேனி மாவட்டம் கூடலூர் நகராட்சிக்குட்பட்ட, நகராட்சி தேர்தல் வார்டு எண் 21 மேலக்கூடலூர் தெற்கு கிராமம், பளியன்குடி வனத்துறை பகுதியில் பல ஆண்டுகளாக பழங்குடியின மலைவாழ் குடும்பங்கள் வசித்து வருகின்றனர். மேற்படி குடும்பங்கள் அடிப்படை வசதிகள் ஏதுமின்றி குடியிருந்து வருகிறார்கள்.மேற்படி குடும்பங்கள் வனத்துறைப் பகுதியில் வாழ்ந்து வருவதற்கு வருவாய்த் துறை மூலம் வசிப்பிட உரிமை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. எனவே, கீழ்கண்ட பட்டியலில் கண்டுள்ள நபர்களுக்கு வருவாய்த்துறை மூலம் வனத்துறை பகுதியில் வசிப்பிட உரிமை வழங்குவதற்கு நகராட்சிக்குத் தடை ஏதும் இல்லை என சான்று வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண் | பயனாளிகள் பெயர் விபரம் | குறிப்பு |
|---|---|---|
| 1 | கருப்பாயி , க/பெ. மகாராஜன் | வசிப்பிட உரிமை வழங்க அனுமதிக்கலாம். |
| 2 | காட்டுராஜா த/பெ . மொண்டு | |
| 3 | மனோஜ் த/பெ. மனோகரன் | |
| 4 | லதா க/பெ .ராஜன் | |
| 5 | முருகமணி த/பெ. கிருஷ்ணன் | |
| 6 | ரதி க/பெ. ஈஸ்வரன் | |
| 7 | ராணி க/பெ. நந்தன் | |
| 8 | லோகுமணி க/பெ. சுருளி | |
| 9 | அருணாசலம் த/பெ. கர்ணன் | |
| 10 | சுருளியப்பன் த/பெ. முருகன் | |
| 11 | ராஜா த/பெ .சீட்டுராஜா | |
| 12 | முத்துப்பாண்டி த/பெ. காட்டுராஜா | வசிப்பிட உரிமை வழங்க அனுமதிக்கலாம் |
| 13 | கலா க/பெ. சன்னாசி | |
| 14 | சத்தியன் த/பெ .மருதுராஜ் | |
| 15 | வைத்தீஸ்வரி க/பெ. வெள்ளச்சாமி | |
| 16 | நந்தகுமார் த/பெ. நம்பியார் | |
| 17 | வீரமணி த/பெ. வீரையா | |

<u>அலுவலகக்குறிப்பு</u>

1.மன்றம் அனுமதிக்கலாம்.

2.மேற்படி பளியன்குடியின் மலைவாழ் மக்களுக்கு வசிப்பிட உரிமை வழங்குவது தொடர்பாக நகராட்சி மூலம் மேற்கண்ட 17 நபர்களுக்கு தடையில்லாச் சான்று வழங்க நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.353,அனுமதிக்கப்பட்டது.**

பொருள்.7

இந்நகராட்சிக்கு அரசாணை எண்.GO(MS)No:173 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (MA.IV) துறை, நாள்.08.12.2022 இன்படி உட்கட்டமைப்பு மற்றும் அடிப்படை வசதிகள் திட்டம் -2022-23-இன் கீழ் இந்நகராட்சியில் புதிய பேருந்து நிலையம் அமைக்கும் பணிக்கு தொகை ரூ.230.00 இலட்சம் ஒதுக்கீடு செய்து (இருநூற்றி முப்பது இலட்சம் மட்டும்) நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு, கீழ்கண்ட பணி செய்திட 31.01.2023 அன்று மின்னனு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது.

| வ. எண் | பணியின் விபரம் | மதிப்பீட்டு தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | கூடலூார் நகராட்சியில் புதிய பேருந்து நிலையம் அமைத்தல் | 230.00 |

மேற்கண்ட பணிக்கு 31.01.2023 அன்று நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் வலைதளம் வழியாக (Online) இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டு, தொழில்நுட்ப பட்டியல் மட்டும் (Technical Bid) 31.01.2023 அன்று திறக்கப்பட்டு ஒப்பந்தப்புள்ளியில் நிர்ணயிக்கப்பட்டுள்ள தொழில்நுட்பதகுதிகள் ஆய்வு செய்யப்பட்டதில் கீழ்குறிப்பிட்டுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும் திட்டப் பணிமேற்கொள்ள தகுதியான ஒப்பந்தப்புள்ளியாக இருந்தது. தொழில்நுட்ப தகுதி வாய்ந்த ஒப்பந்நதாரர்களின் விலை குறிப்பிடப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளி நமுனா (PriceBid) 03.02.2023 அன்று ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் திறக்கப்பட்டதில், வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் கேட்கப்பட்ட விலைவிகிதம் விவரம் கீழ்கண்டவாறு,

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளியில் குறிப்பிடப்பட்டுள்ள விலை விகிதம் |
|---|---|---|
| 1 | திரு. ஆர்.சபீர்அலி, கம்பம் | மதிப்பீட்டு தொகைக்கு (+) 4.94 % கூடுதல் |
| 2 | திருவாளர்கள் ஏ.பி. கன்ஸ்ட்ரக்ஸன்ஸ் கம்பம் | மதிப்பீட்டு தொகைக்கு (+) 10.59 % கூடுதல் |

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலை விகிதத்தினை விட 4.94% சதவிகிதம் கூடுதலாக வழங்கிய திரு.ஆர்.சபீர்அலி கம்பம் ஒப்பந்ததாரரிடமிருந்து விலைக்குறைப்பு செய்ய கோரியதில், ஒப்பந்ததாரர் ஒப்பந்தப்புள்ளியில் குறிப்பிட்டுள்ள **மதிப்பீட்டு விலை விகிதத்தினை விட 0.01% சதவிகிதம்** குறைவான விலை விகிதத்தில் பணியினை செய்து தருகிறேன் என 06.02.2023ஆம் தேதியில் கடிதம் வழங்கியுள்ளார். வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு:–</u>**

1. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும் மதிப்பீட்டு விலை விகிதத்தினை விட கூடுதலாக வரப்பெற்றுள்ளது. இத்திட்டப்பணியின் அவசியம் கருதியும், மீளவும் ஒப்பந்தப்புள்ளி கோரும்பட்சம் விளம்பரசெலவினம் மற்றும் காலதாமதம் ஏற்படும் என்பதால், திரு.ஆர்.சபீர்அலி கம்பம் ஒப்பந்ததாரரிடமிருந்து பெறப்பட்ட விலைக்குறைப்பு கடிதத்தின்படி 0.01% சதவிகிதம் மதிப்பீட்டினை விட குறைவாக செய்து தருவதாக கடிதம் வழங்கியுள்ள திரு.ஆர்.சபீர்அலி, கம்பம் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் அங்கீகரிக்கலாம்.
2. திட்டப்பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.354,அனுமதிக்கப்பட்டது.**

**பொருள்.8**

கூடலூார் நகராட்சியில் பேருந்து நிலையத்தினுள் உள்ள பழைய கட்டிடத்தினை இடித்து அப்புறப்படுத்திட ரூ.3.15 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது..

**அலுவலக குறிப்பு:-**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி செலவினத்தினை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.
3. திட்டப்பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்றத்தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கைகள் மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.355,அனுமதிக்கப்பட்டது.**

பொருள்.9

கூடலூர் நகராட்சியில் பேருந்து நிலையத்தினுள் உள்ள கட்டிடத்தினை இடித்து அப்புறப்படுத்திடும் போது சேகரம் செய்யப்படும் பயன்படக்கூடிய பொருட்களை கழிவு நீக்கம் செய்திட ரூ.1.18 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது..

**அலுவலக குறிப்பு:-**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. திட்டப்பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்றத்தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று ஏல நடவடிக்கைகள் மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.356,அனுமதிக்கப்பட்டது.**

பொருள்.10

இந்நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவில் திடக்கழிவு மேலாண்மைதிட்டத்தின் கீழ் அன்றாடம் உருவாகும் 14 மெட்ரிக் டன் குப்பைகள் சேகரிக்கப்பட்டு மக்கும் குப்பைகள் மக்காத குப்பைகள் என தரம் பிரித்து சேகரித்து முறையாக அப்புறப்படுத்தப்பட்டு வரும் பணிகளை மேற்கொள்ள ஒப்பந்த அடிப்படையில் 60 தூய்மைபணியாளர்கள் பணியமர்த்த சென்னை நகராட்சிகளின் இயக்குநர் அவர்களின் உத்திரவின்படி மூன்று ஆண்டுகளுக்கு 01.03.2019 முதல் 28.02.2022 வரைஅனுமதி பெறப்பட்டு தொடர்ந்து பணிகள் மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில் மேற்கண்ட பணியின் ஒப்பந்த காலம் 28.02.2023 –ஆம் தேதியுடன் முடிவடைந்ததால், மேற்கண்ட பணிக்கு மேற்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர் – சென்னை அவர்களின் அனுமதி ந.க.எண். 35945/2022/EA2- SWM-20

நாள் 10.01.2023,,இல் நிர்வாக அனுமதி வழுங்கப்பட்டு மேற்கண்ட பணிக்கு 14.03.2023 ஆம் ஒப்பந்துபுள்ளி கோரிய நிலையில் ,பொது சுகாதாரம் மற்றும் திடக்கழிவு மேலாண்மை பணியின் அவசர அவசியம் கருதியும் மேற்கண்ட பணிக்கான புதிய நிறுவனத்திற்க்கு பணி உத்தரவு வழுங்கி பணி மேற்கொள்ளும் வரை மேற்கண்ட பணியினை ஏற்கனவே மேற்கொள்ளும் ஒப்பந்ததாரர் திரு.ஆர்.பரமானந்தன் அவர்கள் மூலமாக 01.03.2023 முதல் 31.03.2023 வரை என ஒரு மாதத்திற்க்கு நீட்டிப்பு செய்ய மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| **அலுவலகக்குறிப்பு:-** | 1 | பொது சுகாதாரத் மற்றும் திடக்கழிவு மேலாண்மை பணியின் அவசர அவசியம் கருதி மேற்கண்ட பணியினை மேற்கொண்டு வரும் ஒப்பந்ததாரர் திரு.ஆர்.பரமானந்தன் அவர்கள் மூலமாக 01.03.2023 முதல் 31.03.2023 வரை மேலும் ஒரு மாதத்திற்க்கு நீட்டிப்பு செய்ய மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.094/2020/எச்1) |

**தீர்மான எண்.357,அனுமதிக்கப்பட்டது.**

பொருள்.11

கூடலூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.1,எல்.எப்.ரோட்டில் உள்ள காவல் நிலையம் மற்றும் அதைசார்ந்த காவலர்கள் குடியிருப்புகளுக்கு கடந்த 2011–2012 முதல் 2022/2023 வரை குடிநீர் கட்டணம் நிலுவை தொகையினை செலுத்த கோரி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்கள்,தேனி மற்றும் காவல் ஆள்வாளர் அவர்கள்,கூடலூர் அகியோருக்கு தொடர்ந்து கடிதம் அனுப்பப்பட்ட நிலையில் காவல் ஆய்வாளர் அலுவலக ந.க.எண்.20/கா.ஆ.அலுவலகம்/2022, நாள்.09.12.2022 மற்றும் தேனி காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்திலிருந்து வந்த கடித ந.க.எண்.பி3/41812/311/2022,நாள்.22.12.2022 ஆகிய தேதிகளில் வரப்பெற்ற கடிதத்தில் மேற்கண்ட குடியிருப்புகளை இடித்துவிட்டு புதிய காவலர் குடியிருப்பு கட்டபட உள்ளதாலும் மேலும் மேற்கண்ட குடியிருப்புகளில் 2019 ஆம் ஆண்டு முதல் எவரும் குடியிருக்கவில்லை எனவே 123/001/900269 என்ற இணைப்பை தவிர கீழ்கண்ட விவரப்படியான இணைப்புகளை தற்காலியமாக நிறுத்தி வைக்க கேட்டுக் கொண்டதை தொடர்ந்து, கீழ்கண்ட விவரப்படியான இணைப்புகளை துண்டிப்பு செய்யவும் அதற்க்கான குடிநீர் கட்டணத்தை (DCB)கேட்பு வசூல் நிலுவை யிலிருந்து நீக்கம் செய்ய மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது,

| வ.எண் | குடிநீர் இணைப்பு எண் | நிலுவை மற்றும் நடப்பு குடிநீர் கட்டணம் |
|---|---|---|
| 1 | 123/001/900106 (123/2323) | 8760 |
| 2 | 123/001/900107 (123/2324) | 10080 |
| 3 | 123/001/900382 (123/2325) | 10080 |
| 4 | 123/001/900383 (123/2326) | 10080 |
| 5 | 123/001/900056 (123/2327) | 10080 |
| 6 | 123/001/900221 (123/2328) | 10080 |
| மொத்தம் | | 59160 |

**<u>அலுவலகக்குறிப்பு:-</u>** மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மான எண்.358,அனுமதிக்கப்பட்டது.**

பொருள்.12

கூடலூர் நகராட்சி ஆணையாளர் மற்றும் அலுவலக பயன்பாட்டில் இருந்து வரும் வாகனம் எண். TN-60 R-6378ற்கு வரும் 22.03.2023 உடன் ஆயுள் காப்பீடு முடிவடைய உள்ளதால் ஆயுள் காப்பீடு செலுத்தவும், வாகனத்தின் நலன் கருதி ஆயில் சர்வீஸ் மற்றும் சிறு பழுதுகள் நீக்கம் செய்யவும் ஆகும் உத்தேச செலவினம் ரூ.45,000/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:-</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி செலவினத்தினை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**தீர்மான எண்.359,அனுமதிக்கப்பட்டது.**

**பொருள்.13**

இந்நகராட்சிக்கு சொந்தமான தினசரி சந்தை கட்டணம் வசூல் செய்யும் உரிமம் குத்தகை இனத்தினை திரு.க.மாயத்தேவர் குத்தகைதாரர் என்பவர் நடத்தி வந்த நிலையில்,குடும்ப சூழ்நிலை கருதி இந்த ஏலத்தினை நடப்பு ஆண்டு 2022-23 வரை மட்டுமே ஏலம் நடத்தி கொள்ளுவதாகவும் , 2023-2024 ஆண்டு முதல் நிர்வாகம் நடத்தி கொள்ளவும் என தெரிவிக்கப்பட்ட நிலையில் தினசரி சந்தை கட்டணம் வசூல் செய்யும் குத்தகை உரிமத்தினை திரு.க.மாயத்தேவர், குத்தகைதார் என்பவருக்கு ரத்து செய்தும் , 2023-2024 முதல் மூன்றாண்டுகளுக்கு பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி மூலம் மறு ஏலம் நடத்தவும் மன்றத்தின் அனுமதிக்கு.

<u>**அலுவலக குறிப்பு:-**</u>

மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.360,அனுமதிக்கப்பட்டது.**

**பொருள்.14**

கூடலூர் நகராட்சியில் உள்ள நவீன எரிவாயு தகனமேடைக்கு Estapliment -க்காக தமிழ்நாடு மாசுகட்டுபாட்டு வாரியத்தினரிடமிருந்து பெறப்பட்ட AIR மற்றும் WATER க்குரிய CONSENT-ஐ **2023-2025** ஆம் ஆண்டிற்கு புதுப்பிக்க மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,தேனி அவர்களின் கடித எண் F.TEN0662/GS/DEE/TNPCB/TEN/2023 நாள்.**14.02.2023** இன்படி வழங்கப்பட்ட கேட்புத்தொகை ரூ.**14,200**/-ஐ மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் தமிழ்நாடு மாசுகட்டுபாட்டு வாரியம், தேனிக்கு செலுத்துவதற்கு மன்றத்தின் அனுமதிக்கு.

<u>**அலுவலக குறிப்பு:-**</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி செலவினத்தினை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**தீர்மான எண்.361,அனுமதிக்கப்பட்டது.**

**பொருள்.15**

கூடலூர் நகராட்சியில் வார்டு எண்-8, இராஜா கிணறு தெருவில் உள்ள ஆண்கள் மற்றும் பெண்கள் பொது கழிப்பறைகளில் மராமத்து பணி மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ.1,50,000/-க்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>**அலுவலக குறிப்பு:-**</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி செலவினத்தினை வருவாய் மற்றும் மூலதனநிதியின் கீழ் மேற்கொள்ளலாம்.

**தீர்மான எண்.362,அனுமதிக்கப்பட்டது.**

**பொருள்.16**

கூடலூர் நகராட்சியில் வார்டு எண்-3,4,5,6,10,12,மற்றும் **15** ஆகிய வார்டுகளில் உள்ள ஆண்கள் மற்றும் பெண்கள் பொது கழிப்பறைகளில் சிறு பழுதுகள் மற்றும் பராமரிப்பு பணி மேற்கொள்ள ரூ.1,00,000/-க்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>**அலுவலக குறிப்பு:-**</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி செலவினத்தினை வருவாய் மற்றும் மூலதனநிதியின் கீழ் மேற்கொள்ளலாம்.

**தீர்மான எண்.363,அனுமதிக்கப்பட்டது.**

பொருள்.17

கூடலூர் நகராட்சியில் (I&A) உட்கட்டமைப்பு மற்றும் அடிப்படை வசதிகள் திட்டம் -2022-23 இன் கீழ் இந்நகராட்சியில் புதிய பேருந்து நிலையம் அமைக்கும் பணிக்கு 31.01.2023 அன்று மின்னனு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. இப்பணிகள் குறித்த ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு விளம்பரத்தினை ACCORD ADVERTISING AGENCIES சென்னை மூலம் விளம்பரம் செய்தமைக்கான விளம்பர கட்டணம் ரூ.25,300/-ஐ வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>:-

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி செலவினத்தினை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**தீர்மான எண்.364,அனுமதிக்கப்பட்டது.**

பொருள்.18

கூடலூர் நகராட்சி நகர்மன்றத்தலைவர் அவர்களின் **03.02.2023** ஆம் தேதிய முன் அனுமதியில் அனுமதிக்கப்பட்டபடி, கீழ்கண்ட பணியினை மேற்கொள்ள **24.02.2023** ம் நாள் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், பரிசீலனைக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எ ண். | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ.இலட்சத் தில் | ஒப்பந்ததாரரின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் | |
|---|---|---|---|---|---|
| | | | | மதிப்பீட்டை விட குறைவு | மதிப்பீட்டை விட அதிகம். |
| 1 | கூடலூர் நகராட்சியில் பேருந்து நிலையத்தினுள் உள்ள பழைய கட்டிடத்தினை இடித்து அப்புறப்படுத்துதல் | 3.15 | திரு.சி.சேரலாதன் | 0.10% | – |
| | | | திரு.கே.சேகர் | – | 0.20% |

**அலுவலகக் குறிப்பு : –**

1. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டினை விட 0.10% குறைவான விலை விகிதம் கொடுத்துள்ள **திரு.சி.சேரலாதன்** அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் அங்கீகரிக்கலாம் .
2. திட்டப்பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்றத்தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.365,அங்கீகரிக்கப்பட்டது.**

பொருள்.19

கூடலூர் நகராட்சிக்கு ஆண்டிப்பட்டி சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத்திட்டம் 2022-23ன் கீழ் வார்டு எண்-7,சந்தை வளாகத்தினுள் புதிதாக அங்கன்வாடி மையம் கட்டிட பணி மேற்கொள்ளப்பட்டவுள்ள பணிக்கு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை AFTERNOON ENGLISH Coimbatore என்ற தினசரி நாளிதழில் விளம்பரம் செய்தமைக்கான விளம்பரக் கட்டணத் தொகை **ரூ.13,650**/-ஐ மேற்படி நாளிதழுக்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு:-</u>**

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. மேற்படி செலவினத்தினை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்

**தீர்மான எண்.366,அனுமதிக்கப்பட்டது.**

பொருள்.20

தேனி மாவட்டத்தில் உள்ள கூடலூர் நகராட்சி 2004ஆம் ஆண்டு முதல் மூன்றாம் நிலை நகராட்சியாகவும் பின்னர் 2010ஆம் முதல் இரண்டாம் நிலை நகராட்சியாகவும் தரம் உயர்த்தப்பட்ட செயல்பட்டு வருகிறது. இந்நகராட்சியானது 21 வார்டுகளை உள்ளடக்கிய 32.00 சதுர கி.மீ பரப்பளவு கொண்ட நகரம் ஆகும் 2011 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கொடுப்பின் படி இந்நகராட்சியின் மக்கள் தொகை 41915ஆகும். 1955 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட கம்பம் பள்ளத்தாக்கு கூட்டு குடிநீர் திட்டத்தின்மூலம் 1.20 MLD மற்றும் 1986 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட 2 –வது குடிநீர் திட்டத்தின் மூலம் 2.20 MLD ஆக மொத்தம் 3.40 MLD குடிநீர் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தினரிடமிருந்து பெறப்பட்டு நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு 81 LPCD வீதம் வழங்கப்பட்டு வந்தது.

கூடலூர் நகராட்சியில் பெருகி வரும் மக்கள்தொகையின் அடிப்படையிலும் பொதுமக்களின் அத்தியாவசிய தேவைக்காகவும் 1986–ஆம் ஆண்டில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் உருவாக்கப்பட்ட 2–வது குடிநீர் திட்டத்தில் சில மேம்பாட்டு பணிகள் செயல்படுத்தி கூடலூர் நகராட்சிக்கு என தனித்திட்டம் செயல்படுத்த மதிப்பீட்டு குழுவில் முடிவு செய்யப்பட்டது. நாள் ஒன்றிற்கு நபர் ஒருவருக்கு 135 எல்.பி.சி.டி வீதம் குடிநீர் வழுங்குவதற்கு ஏற்ப தலைமை நீரேற்று நிலையத்தில் தரைமட்ட நீர்தேக்க தொட்டி கட்டுதல், புதியதாக மின்மோட்டார் பொருத்துதல், சுத்திகரிப்பு மையம் அமைத்தல் தலைமை நீரேற்று நிலையத்திலிருந்து 7.65 கி.மீ தொலைவிற்க்கு D.I பைப்பினால் பிரதான பம்பிங் மெயின் அமைத்தல் மற்றும் பழைய 3 மேல்நிலை நீர்தேக்க தொட்டிக்கான இணைப்பு குழாய்கள் அமைத்து செயல்படுத்த தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் (TWAD) மூலம் விரிவான திட்ட மதிப்பீடு ரூ.13.68 கோடிக்கு தயார் செய்து பணிகள் செயல்படுத்திட பரிந்துரை செய்யப்பட்டது.

அதன் படி மேற்கண்ட திட்டத்திற்கு பார்வை 1 இல் கண்ட அரசாணையின் படி இயக்குதல் மற்றும் பராமரித்தல் உட்கட்டமைப்பு இடைவெளி நிரப்புதல் நிதியின் கீழ் கூடலூர் நகருக்கென புதிய குடிநீர் அபிவிருத்தி திட்டம் ரூ13.68 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்திட அனுமதி வழங்கி உத்திரவிடப்பட்டது, அதனை தொடர்ந்து மேற்கண்ட திட்டத்தின் அனைத்து பணிகளும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தினரால் மேற்கொள்ளப்பட்டு முடிக்கப்பட்டு சோதனை ஓட்டம் முடிந்து 2021 ஆம் ஆண்டு முதல் ஒப்பந்ததாரரின் பராமரிப்பில் இருந்து வருகிறது.

பார்வை 2–இல் காணும் அரசாணை (நிலை) எண்.51 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (குவ 4) துறை, நாள்.09.03.2001 –இன் படி நகர குடிநீர் திட்டங்கள் நகர உள்ளாட்சி அமைப்பு மற்றும் குடிநீர் வாரியம் மூலமாக செயல்படுத்தப்படும் குடிநீர் திட்டங்கள் பின்பற்ற வேண்டிய வழிமுறைகள் குறித்து பிரிவு (IX) பராமரிப்பு உட்பிரிவு(ஆ) –இல் தனித்திட்டத்தை பொறுத்தவரை அந்தந்த உள்ளாட்சி அமைப்பே அதனை முழுமையாக பராமரிக்க வேண்டும் எனவும் அதற்கான பணியாளர்களை துறை தலைவர்களிடம் ஆணை பெற்று தேவை அடிப்படையில் பணியாளர்களை பூர்த்தி செய்யப்படவேண்டும் என உத்திரவிடபட்டுள்ளது.

**. வருடாந்திர பராமரிப்பு செலவினம் ( உத்தேச செலவினம்)**

**I.திட்ட செயல்பாடு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் மேற்கொண்டால் ஏற்படும் செலவின**

| வ.எண் | விபரம் | தொகை |
|---|---|---|
| 1 | தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு _மாதந்தோறும் பராமரிப்பு மற்றும் குடிநீர் கட்டணங்களுக்காக கோரும் தொகை | ரூ.00.18 கோடி (சராசரியாக) |
| 2 | வருடாந்திர செலவினம் நகராட்சி தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு _செலுத்த வேண்டியது | ரூ.2.16 கோடி |

**நகராட்சி மூலம் வருடாந்திர பராமரிப்பு பணி மேற்கொள்ளும் பட்சத்தில் உண்டாகும் உத்தேச செலவினம்.**

| வ. எண் | பதவியின் பெயர் | எண்ணிக்கை | நாளொன்றுக்கு விலை பட்டியல் | மாதாந்திர செலவின தொகை (ரூ) | வருடத்திற்கு |
|---|---|---|---|---|---|
| 1. | எலட்ரீஷியன் | 3 (8மணி நேரத்திற்கு 1 பணியாளர் வீதம் | 3x783.00 | 70470.00 | 845640.00 |
| 2. | பில்டர் பெட் ஆபரேட்டர் (Mazdoor I) | 2 | 2x698.00 | 41880.00 | 502560.00 |
| 3. | வாட்ச்மேன் (Mazdoor II) | 2 | 2x566.00 | 33960.00 | 407520.00 |
| 4. | மின்சார கட்டண செலவினம் | 50 எச்.பி. ஒரு மோட்டார் | 912x8=7296 | 218880.00 | 2626560.00 |
| 5. | குடிநீர் பராமரிப்பு பணிகள் | Gas Chlorine | – | 33000 | 3,96,000 |
| | | Turn cock & Fitter | 10x566=5660 | 1,69,800 | 20,37,600 |
| | | Burst Work | – | - | 15,00,000 |
| | **ஆக மொத்தம்** | | | | **8315880.00** |

மேற்காணும் அட்டவணைகளின் படியான விவரப்படி குடிநீர் திட்டத்தினை நகராட்சியால் செயல்படுத்தும் போது ஏற்படும் செலவினம். ரூ. 83,15,880/- ஆகும் ஆனால் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் குடிநீர் பெறப்படுவதால் நகராட்சிக்கு ஆண்டொன்றுக்கு செலவினம் ரூ.216.00 இலட்சம் ஆகும்.இதனால் நகராட்சிக்கு ஆண்டொன்றுக்கு கூடுதல் செலவினம் ரூ.132.85 .இலட்சம் ஏற்படுகிறது, எனவே இத்திட்டத்தினை நகராட்சி வசம் ஒப்படைக்கும் பட்சத்தில் நகராட்சி நிதியில் குறைவான செலவில் மேற்கொள்ள முடியும்.எனவே கூடலூர் நகராட்சிக்கு என தனியாக உள்ள புதிய

குடிநீர் அபிவிருத்தி திட்டத்தினை நகராட்சி வசம் ஒப்படைப்பு செய்திட தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு உரிய உத்திரவு வழங்க வேண்டி நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களுக்கு கருத்துரு அனுப்பவும் அவ்வாறு ஒப்படைப்பு செய்யும் பட்சத்தில் தமிழ்நாடு அரசாணை (நிலை) எண்.51, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (குவ 4) துறை, நாள் : 09.03.2001 –ன்படி குடிநீர் வழங்கல் பணியினை மேற்கொள்ள தேவையான பணியாளர்களை உள்ளாட்சி அமைப்புகளே நியமனம் செய்து கொள்ளலாம் என தெரிவித்துள்ளதன்படி அதற்கான அனுமதியும் வழங்குமாறு கருத்துரு அனுப்ப மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு:-</u>**

மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.367,அனுமதிக்கப்பட்டது.**

**பொருள்.21**

கூடலூா் நகராட்சி, நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன்அனுமதி நாள்**.30.11.2022 ,இன்** படி, பொது சுகாதார பிரிவில் பணியாற்றும் தூய்மைப்பணியாளர்களுக்கு தேவையான பாதுகாப்பு உபகரணங்கள் கீழ்கண்ட விவரப்படியான பொருட்கள் வினியோகம் செய்யும் பணிக்கு **24.02.2023** ஆம் நாள் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளி மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது

| **வ.எண்** | **பொருட்கள் விவரம்** | **M' EXCEL PORTS,Pvt,Ltd. Chennai** | **PAVITHRA INCENSES, Tirupathur** |
|---|---|---|---|
| **1** | கையுறை | **135.30** | **136.00** |
| **2** | கம்பூட் (காலுறை) | **501.84** | **502.00** |
| **3** | பாதுகாப்பு தொப்பி ( Safety Helmet) | **192.70** | **193.00** |
| **4** | ஒளிரும் மேல்சட்டை | **132.84** | **133.00** |
| **5** | ஒளிரும் தொப்பி | **80.36** | **81.00** |
| **6** | முகவுறை | **18.04** | **18.50** |

**அலுவலகக் குறிப்பு :** வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவாக கொடுத்துள்ள M/S **M' EXCEL PORTS,Pvt,Ltd. Chennai** என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் அங்கீகரிக்கலாம்

**தீர்மான எண்.368,அங்கீகரிக்கப்பட்டது.**

**பொருள்.22**

கூடலூா் நகராட்சி, நகர்மன்றத் தீர்மான எண்.314 நாள் **.09.01.2023,** இன் படி பொது சுகாதார பிரிவில் பணியாற்றும் தூய்மைப்பணியாளர்களுக்கு தேவையான தளவாட சாமான்கள் கீழ்கண்ட விவரப்படியான வினியோகம் செய்யும் பணிக்கு **24.02.2023** ஆம் நாள் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளி மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | பொருட்கள் விவரம் | M' EXCEL PORTS,Pvt,Ltd. Chennai | PAVITHRA INCENSES, Tirupathur |
|---|---|---|---|
| 1 | மூங்கில் கூடை (பெரியது) | 154.82 | 159.74 |
| 2 | மூங்கில் கூடை (சிறியது) | 125.79 | 128.25 |
| 3 | தென்னம் துடப்பம் | 42.58 | 44.21 |
| 4 | குப்பை அள்ளும் தகடு | 54.19 | 55.83 |
| 5 | மண்வெட்டி (கைபிடியுடன்) | 396.72 | 402.46 |
| 6 | களைகொள்ளி (கைபிடியுடன்) | 348.32 | 350.80 |
| 7 | அலுமினிய அன்னக்கூடை | 454.78 | 458.05 |
| 8 | இரும்பு தகடு | 135.47 | 137.10 |
| 9 | முள்கொக்கி பெரியது | 416.07 | 417.71 |
| 10 | முள்கொக்கி சிறியது | 503.16 | 507.42 |
| 11 | கத்தி (கைபிடியுடன்) | 358.02 | 359.49 |
| 12 | கால்வாய் கரண்டி (கைபிடியுடன்) | 251.58 | 252.72 |
| 13 | மண் அகற்றும் பிரஸ் (கைபிடியுடன்) | 299.96 | 301.27 |
| 14 | கடப்பாறை | 1296.59 | 1297.32 |
| 15 | சம்பட்டி | 1412.70 | 1414.34 |
| 16 | மலார்–சிமார் | 619.27 | 629.19 |
| 17 | செப்பு மூங்கில் | 222.55 | 224.02 |
| 18 | இரும்பு பக்கெட் | 445.10 | 446.41 |
| 19 | மண்வெட்டி பெரியது (slovel) | 1383.67 | 1384.49 |

**அலுவலகக் குறிப்பு:** வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவாக கொடுத்துள்ள M/S **M' EXCEL PORTS,Pvt,Ltd. Chennai** என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் அங்கீகரிக்கலாம் .

**தீர்மான எண்.369,அங்கீகரிக்கப்பட்டது.**

பொருள்.23

இந்நகராட்சி பொது சுகாதார பிரிவில் நகராட்சி எல்லைக்குட்பட்ட 21 வார்டுகளில் களப்பணியாளர்கள் மூலமாக தினசரி நோய் தடுப்பு பணியின் போது டெங்கு,மலோரியா,சிக்கன் குனியா மற்றும் இதர தொற்றுநோய் பரவாமல் தடுக்கும் பொருட்டு மேற்கண்ட பணி மேற்கொள்ள தேவையான அபேட் (Temephos %), TNMSC ஆங்கிகாரம் பெற்ற நிறுவனத்தின் மூலமாக 500 லீட்டர் கொள்முதல் செய்ய ஆகும் உத்தேச செலவினம் ரூ.3,69,000/– க்கு மன்றத்தின் அழுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு : –**

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. மேற்கண்ட செலவினத்தை நகராட்சி வருவாய் மற்றும் மூலதன நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் தீர்மானிக்கலாம்.

**தீர்மான எண்.370,அனுமதிக்கப்பட்டது.**

**பொருள்.24**

இந்நகராட்சி பொது சுகாதார பிரிவில் நகராட்சி எல்லைக்குட்பட்ட 21 வார்டுகளில் களப்பணியாளர்கள் மூலமாக டெங்கு தடுப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது,மேற்கண்ட பணியின் மூலம் கொசு மூலம் பரவும் நோய் தொற்றை பரவாமல் கட்டுப்படுத்தும் பொருட்டு அதற்க்கு தேவையான பைரித்திரம் (Pyrethyum 2%),TNMSC ஆங்கிகாரம் பெற்ற நிறுவனத்தின் மூலமாக 340 லீட்டர் கொள்முதல் செய்ய ஆகும் உத்தேச செலவினம் ரூ.4,45,000/– க்கு மன்றத்தின் அழுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு : –**

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. மேற்கண்ட செலவினத்தை நகராட்சி வருவாய் மற்றும் மூலதன நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் தீர்மானிக்கலாம்.

**தீர்மான எண்.371,அனுமதிக்கப்பட்டது.**

**பொருள்.25**

இந்நகராட்சி பொது சுகாதார பிரிவில் நகராட்சி எல்லைக்குட்பட்ட 21 வார்டுகளில் கொசு ஒழிப்பு பணி மற்றும் முதிர் கொசு ஒழிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது ,மேலும் பொது மக்களிடையே நோய்தொற்று பரவாவண்ணம்,கழிவு நீர் கால்வாய்கள்,நீர் தேக்கங்கள் மற்றும் நீர் தேங்கும் தாழ்வான பகுதிகளில் கொசுப் புழுக்கள் மற்றும் இதர கிருமிகளை கட்டுப்படுத்திட தேவையான BT (Bacillus Thuringiensis) பவுடரை TNMSC ஆங்கிகாரம் பெற்ற நிறுவனத்தின் மூலமாக 350 கிலோ கொள்முதல் செய்ய ஆகும் உத்தேச செலவினம் ரூ.4,45,000/– க்கு மன்றத்தின் அழுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு : –**

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. மேற்கண்ட செலவினத்தை நகராட்சி வருவாய் மற்றும் மூலதன நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் தீர்மானிக்கலாம்.

**தீர்மான எண்.372,அனுமதிக்கப்பட்டது.**

**பொருள்.26**

இந்நகராட்சி பொது சுகாதார பிரிவில் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் தினசரி தூய்மைப் பணியாளர்மூலமாக தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் திடக்கழிவு மேலாண்மை பணியினை தொடந்து மேற்கொள்ளப்பட்டு வருகிறது,தினசரி சேகரமாகும் மக்கும் குப்பையினை தரம்பிரித்து நுண்உரக்கூடம் (MCC) மூலமாக உரம் தயாரிக்கும் பணிகள் மேற்கொள்ளப்படுகிறது,மேற்கண்ட பணியினை மேற்கொள்ளும் தூய்மைப் பணியாளர்களுக்கு தேவையான கீழ்கண்ட விவரப்படியான பாதுகாப்பு உபகரணங்கள் வாங்க ஆகும் உத்தேச செலவினம் ரூ.2,90,000/–த்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | பொருட்களின் விவரம் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | கையுறை | 400 |
| 2 | கம்பூட் (காலுறை) | 120 |
| 3 | பாதுகாப்பு தொப்பி ( Safety Helmet) | 120 |
| 4 | ஒளிரும் மேல்சட்டை | 250 |
| 5 | ஒளிரும் தொப்பி | 250 |
| 6 | முகவுறை | 1000 |

அலுவலகக் குறிப்பு : –

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. மேற்கண்ட பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவரின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதை மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மான எண்.373,அனுமதிக்கப்பட்டது.**

**பொருள்.27**

கூடலூர் நகராட்சி பேருந்து நிலையத்தில் பயனற்ற நிலையில் பொது மக்களின் பாதுகாப்பிற்கு இடையூராக உள்ள பழைய கிணற்றினை மூடி அவ்விடத்தில் இரண்டு சக்கர வாகன நிறுத்திமிடம் அமைக்க உத்தேசிக்கபட்டுள்ளது.அதன்பொருட்டு மேற்படி கிணற்றினை மூடுவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு:-</u>**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி செலவினத்தினை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்

**தீர்மான எண்.374,அனுமதிக்கப்பட்டது.**

**பொருள்.28**

கூடலூர் நகராட்சி வார்டு எண் -1, கள்ளர் மடத்தெருவில் புதியதாக ஆழ்துளை கிணறுடன் கூடிய புதிய சிறுமின் விசை பம்பு அமைக்க ரூ.2,10,000/-க்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு:-</u>**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி செலவினத்தினை நகராட்சி குடிநீர் திட்ட நிதியின் கீழ் மேற்கொள்ளலாம்.

**தீர்மான எண்.375,அனுமதிக்கப்பட்டது.**

**பொருள்.29**

கூடலூர் நகராட்சி வார்டு எண் -1ல் பசும்பொன் நகர் தெருவில் புதியதாக ஆழ்துழை கிணறுடன் கூடிய புதிய சிறுமின் விசை பம்பு அமைக்க ரூ.2.10 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு:-</u>**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி செலவினத்தினை நகராட்சி குடிநீர் திட்ட நிதியின் கீழ் மேற்கொள்ளலாம்.

**தீர்மான எண்.376,அனுமதிக்கப்பட்டது.**

**பொருள்.30**

கூடலூர் நகராட்சியில் தொலை நோக்கு திட்டம் -2031 கடந்த நிதி ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட பணிகளை பதிவேற்றம் செய்து வார்டு மறுவரையாக மாறியுள்ள தெருக்களின் புதிய Unicode எண்கள் திருத்தம் செய்ய வேண்டி நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் கடிதத்தில் அறிவுரை வழங்கப்பட்டதன்படி சாலை பதிவேட்டில் கணிணியில் பதிவேற்றம் செய்ய உரிய விலைப்புள்ளி பெற்று பணிகள் மேற்கொள்ளவும் உத்தேச மதிப்பீடு ரூ.50,000/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு:-</u>**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி செலவினத்தினை பொது நிதியின் கீழ் மேற்கொள்ளலாம்.

**தீர்மான எண்.377,அனுமதிக்கப்பட்டது.**

**பொருள்.31**

நகராட்சி நிர்வாக இயக்குநர்,சென்னை அவர்களின் கடித ந.க.எண்.8880/2022/P1 நாள்.13/02/2023இன்படி நமக்கு நாமே திட்டம் 2022-2023-இன் கீழ் இந்நகராட்சியில் நான்கு இடங்களில் புதிதாக பேவர் பிளாக் சாலை, சிறு பாலம் மற்றும் மழைநீர் வடிகால் அமைக்கும் பணிக்கு தொகை ரூ.25.51 இலட்சம் ஒதுக்கீடு செய்து (இருபத்தி ஐந்து இலட்சத்தி ஐம்பத்தி ஒன்று மட்டும்) அனுமதி அளித்து வரப்பெற்றுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு:-</u>**

மன்றம் பதிவு செய்யலாம்.

**தீர்மான எண்.378,பதிவு செய்யப்பட்டது.**

**(ஒம்/–)லோ.பத்மாவதி**
**நகர்மன்றத்தலைவர்**
**கூடலூர் நகராட்சி**